November 2014 subject reports

# Tamil B

## Overall grade boundaries

### Standard level

| Grade: | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| Mark range: | 0 - 11 | 12 - 27 | 28 - 44 | 45 - 59 | 60 - 73 | 74 - 86 | 87 - 100 |

## Standard level internal assessment

### Component grade boundaries

| Grade: | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| Mark range: | 0 - 3 | 4 - 6 | 7 - 12 | 13 - 17 | 18 - 21 | 22 - 26 | 27 - 30 |

## *சமர்ப்பிக்கப்பட்ட பணியின் பரப்பல்லையும் பொருத்தமுடைமையும்*

இந்த வாய்மொழித் தேர்வு மாணவர்களது வாய்மொழித் திறன்களையும் கருத்துப்பரிமாற்றத்திறன்களையும் வெளிக்காட்ட உதவும் நல்ல களமாகும். இத்தேர்வில் மாணவர்கள் தனிப்பட்ட வாய்மொழி நடவடிக்கையிலும், அதனைத் தொடர்ந்து கருத்துப்பரிமாற்ற வாய்மொழி நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்படுவர்.

கலந்துரையாடலுக்கு ஏற்புடைய வகையில் பல்வேறுபட்ட தலைப்புகள் வழங்கப்பட்டிருந்தன .மாணவர்கள் தங்கள் மொழியாற்றலையும் திறன்களையும் மொழிவழி வெளிப்படுத்த ஏதுவாக இவை அமைந்திருந்தன .தெரிவுசெய்யப்பட்ட நிழற்படங்கள் மாணவர்களின் வயதுக்கும் அனுபவ எல்லைக்கும் பொருத்தமுடையனவாகவும் இருந்தன .பெரும்பாலும் படக்காட்சிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன. உரையாடல் குறிப்புகள் அடங்கிய நிழற்படக் காட்சிகள்

பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை. மாணவர்களைத் தர்க்கரீதியாகச் சிந்தித்துப் பேச வைக்க உரையாடல் குறிப்புகள் உதவியாய் அமையக்கூடும்.

சில படங்களில் காணப்பட்ட ஊக்கக்கூறு காட்சிகள் மாணவர்களுக்கு நன்கு அறிமுகமான காட்சிகளாக அமையப் பெற்றிருந்தன. (எ-டு) உடற்பயிற்சி, சத்துணவு. வாய்மொழித் திறன் சோதனையில் அதிகம் பரிச்சயமான ஊக்கக்கூறுகளைத் தவிர்க்கலாம். இது மாணவர்களை வாய்மொழித்திறன் ஆற்றலை வேறுபடுத்திப் பார்க்கவும் மதிப்பிடவும் உதவியாய் அமையும். மாணவர்களின் படைப்புகளைத் தாங்கிய ஒலிப்பதிவுகள் தரமானதாகவும் தெளிவாகவும் அமைந்திருந்ததோடு நேரக்கட்டுப்பாடும் நன்கு கடைப்பிடிக்கப்பட்டிருந்தது .ஆசிரியர்கள் மாணவர்களின் வாய்மொழித் திறன்களும் கருத்துப்பரிமாற்றத்திறன்களும் தகுந்த முறையில் வெளிப்படும் வகையில் வினாக்களைத் தொடுத்திருந்தனர் .ஆழ்ந்து சிந்தித்துப் பதிலளிக்கும் வகையிலும் கலந்துரையாடல் புரிவதற்கும் ஏதுவாக வினாக்கள் தொடுக்கப்பட்டன .சில தருணங்களில் மட்டும் மாணவர்கள் தங்கள் விடைகளை யோசித்துக்கூறுவதற்குப் போதிய கால அவகாசம் ஆசிரியர்கள் தரத் தவறியிருந்தனர். மொழித்திறம் குறைவுடைய மாணவர்கள் தாங்கள் கூற விரும்பும் கருத்துகளைத் தெரிவிக்கக் கூடுதல் நேரம் எடுத்துக்கொள்வார்கள் என்பதை ஆசிரியர்கள் நினைவிற்கொள்ள வேண்டும்.

# *ஒவ்வோர் அளவையிலும் மாணவரின் செயல்திறம்*

பொதுவில், தனிப்பட்ட வாய்மொழிப் படைப்பில் மாணவர்கள் பலரும் தங்கள் படைப்புத்திறனை நன்கு வெளிப்படுத்தியிருந்தனர் .பலரது படைப்புகளில் தெரிவுசெய்யப்பட்ட தலைப்பு பலருக்கும் நன்கு பரிச்சியமான தலைப்பாகவே அமைந்தது) .எ-டு (பாராம்பரிய விளையாட்டு, கொண்டாடும் விழா; பலரும் சிரமமின்றித் தங்கள் படைப்வை எதிர்பார்ப்புக்கேற்ப நன்கு படைத்தனர் .சிலர் மட்டும், அளவுக்கதிகமாக உடன் கொண்டுவந்த குறிப்புகளைப் பார்த்துப் பேசுவது போல் நிறுத்தி நிறுத்தித் தடுமாற்றத்தோடு பேசினர் .அத்தகைய மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூடுதலான பயிற்சியும் வழிகாட்டுதலும் தந்து உதவ வேண்டும்.

## *அளவை* A- *படைப்பாக்கத் திறன்கள்*

வாய்மொழிப் படைப்பில் முதற்பகுதியில், மாணவர்கள் பெரும்பாலோர் தங்கள் உயர்தர மொழியாற்றலை நன்முறையில் வெளிக்காட்டியிருந்தனர் .பொருத்தமான சொல்லாட்சியும் வாக்கிய அமைப்புகளையும் கொண்டு தங்கள் கருத்துகளை நிரல்பட விளக்கியிருந்தனர் .மொழித்தரத்தில் பின்தங்கிய மாணவர்கள் சிலர் மட்டும் சிற்சில வாக்கியப் பிழைகளையும் தவறான சொற்றொடர்களையும் பயன்படுத்தியிருந்தனர் . பேசிய மாணவர்கள் பலரும் உச்சரிப்பில் தனிக்கவனம் செலுத்தவேண்டும். மொழியில் பின்தங்கிய மாணவர்கள் சிலர் தங்கள் கருத்துகளைத் தெளிவுபட எடுத்துரைக்கச் சிரமப்பட்டனர். அவர்கள் மிகுந்த தடுமாற்றத்தோடு தங்கள் படைப்பைச் செய்தது அவர்களுக்குக் கூடுதல் பயிற்சிகள் தேவை என்பதைக்


International Baccalaureate Baccalauréat International Bachillerato Internacional

காட்டுகிறது. படக்காட்சியில் வெறுமனே காட்சிகளை விவரிக்கின்ற விதமாக சிலரது படைப்புகள் அமைந்திருந்தன. கருத்தளவில் தரமான படைப்புகளாக அவை அமையவில்லை.

## *எதிர்கால மாணவர்களின் கற்பித்தலுக்குரிய பரிந்துரைகளும் வழிகாட்டலும்*

பொதுவில், மொழித்திறம் மிக்க மாணவர்கள் பலரும் தங்கள் கருத்துகளையும் எண்ணங்களையும் தெளிவுபட முன்வைத்தனர். ஆசிரியரோடு பொருத்தான முறையில் கருத்துப்பரிமாற்றம் செய்ததோடு, கேட்கப்பட்ட வினாக்களுக்கும் ஏற்புடைய வகையில் பதிலளித்து உரையாடினர். சராசரி மொழித்திறன் கொண்ட மாணவர்கள் சிலர் மட்டும் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் கேட்டுணர் திறன்களிலும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவில்லை .போதிய சொல்வளம் இல்லாக் குறையும், பேச்சில் தடுமாற்றமும் அவர்களின் கருத்துப்பரிமாற்றத்திற்குத் தடையாக விளங்கின .இத்தகைய மாணவர்களுக்கு வாய்மொழித்திறன்களில் கூடுதல் பயிற்சிகள் தேவை என்பதை ஆசிரியர் நினைவிற் கொள்ள வேண்டும்.

தலைப்பையொட்டிய அமைந்த உரையாடலில் மாணவர்கள் சிலர் எதிர்பார்ப்பையும் விஞ்சுகின்ற அளவுக்குத் தர்க்கரீதியான விதாதித்துத் தங்கள் மொழியாற்றலை நன்முறையில் வெளிப்படுத்தியிருந்தனர் .ஆசிரியர்களோடு நடைபெற்ற கருத்துப்பரிமாற்றத்தில் அவர்கள் திறம்படத் தங்கள் பொருளறிவையும் மொழியறிவையும் வெளிக்காட்டியிருந்தனர் .இதற்கு மாறாக, மொழிநிலையில் பின்தங்கிய மாணவர்கள் ஆசிரியர் கேட்ட வினாக்களைப் புரிந்துகொள்வும் சிரமப்பட்டனர். திரும்பத் திரும்பக் கேள்வியைக் கேட்டுத் தெளிவுபடுத்தியது கலந்துரையாடலின் இயல்பான போக்கைப் பாதிப்பதாக அமைந்தது.

எதிர்கால மாணவர்களின் கற்பித்தலுக்குரிய பரிந்துரைகளும் வழிகாட்டலும்

மாணவர்களைத் தொடர்ந்து பல்வேறுபட்ட படத்தலைப்புகளுக்கும் கற்றல் சூழல்களுக்கும் ஏற்பப் பயிற்றல் வேண்டும் .சமூக வலைத்தளங்களிலும், இணையத்திலும் கிடைக்கப்பெறும் பொருத்தமான கருத்துப்பரிமாற்றச் செய்திகளையும் படங்களையும் கொண்டு வகுப்பறையில் தரமான வாய்மொழிப் பயிற்சிகள் வழங்கலாம் .எழுப்பப்படும் வினாக்களுக்கு எவ்வாறு தரமான விடை பகர்தல் என்பதில் நல்ல மாதிரிகளைக் காட்டி மாணவர்களுக்கு எதிர்பார்ப்பு நிலைகளை விளக்கிக் கூறுதல் வேண்டும் .

வாய்மொழித் தேர்வின் அடிப்படை நோக்கமானது, வாய்மொழித் திறனில் மாணவரின் படைப்பாற்றலையும், கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் சோதிப்பது ஆகும். இதை மனத்தில் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களோடு கலந்துரையாட வேண்டும். ஒரு தலைப்பையொட்டி எத்தகைய வினாக்களும் விளக்கங்களும் கேட்கப்படலாம் என்பது குறித்த விவரிவான பயிற்றல் வகுப்பறைச் சூழலில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## Standard level written assignment

### Component grade boundaries

| Grade: | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| Mark range: | 0 - 3 | 4 - 7 | 8 - 12 | 13 - 15 | 16 - 19 | 20 - 22 | 23 - 25 |

## *சமர்ப்பிக்கப்பட்ட பணியின் பரப்பல்லையும் பொருத்தமுடைமையும்*

மையப் பாடப்பொருள்களில் படித்தவற்றை மீள்நோக்கவும் மேலும் புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளவும் மாணவர்களை வழிநடத்துவதே எழுத்துவழி ஒப்படைப்பின் முக்கிய நோக்கமாகும் .அதோடு, பலவிதப் பனுவல்களிடையே உள்ள தொடர்பிணைப்பினை உணர்ந்துகொள்ளவும் படைப்பாக்கத் திறனை வளர்த்துக்கொள்ளவும் எழுத்துவழி ஒப்படைப்பு உதவுகிறது.

இப்பணிக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட பனுவல்கள் மையப் பாடப்பொருள்களோடு தொடர்புடையாக அமைந்திருந்தன .ஆனால், மூன்று பனுவல்களுமே மையப் பாடப்பொருள்களோடு சார்ந்த வெவ்வேறு பாட உள்ளடக்கத்தைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும் .ஓரிரு படைப்புகளில் இந்த எதிர்பார்ப்பு நிறைவாக இருக்கவில்லை .சில பனுவல் சான்றுகள் ஒரே விதமான செய்தி பல்வேறு செய்திக் கட்டுரை மூலமாக வெளியிடப்பட்டவையாக இருந்தன .மூன்று பனுவல்களும் முற்றில் தொடர்பில்லாத வெவ்வேறு தளங்களிலிருந்து பெறப்பட்டவையாக இருத்தலை உறுதிசெய்ய வேண்டும் .இணையத்தளங்களிலிருந்து பெறப்படும் செய்திகளில் அச்சுப்பிழைகளோ வாக்கிய அமைப்புப் பிழைகளோ அதிகளவு இல்லாதிருப்பது அவசியாகும் .நல்ல பனுவல்களைத் தேடிப் பெறுவதில் ஆசிரியரின் வழிகாட்டுதல் பெரிதும் துணைபுரியும் .

## *ஒவ்வோர் அளவையிலும் மாணவரின் செயல்திறம்*

பெரும்பாலான மாணவர்கள் நல்ல முறையில் தங்கள் எழுத்துவழி ஒப்படைப்புகளைச் செய்திருந்தனர் .சான்று பனுவல்களில் உள்ள செய்திகளை ஏற்புடைய வகைகளில் பயன்படுத்தித் தங்கள் கட்டுரைகளை அமைத்திருந்தனர் .சிலர் மட்டும் சான்று பனுவல்களில் உள்ள செய்திகளை அளவுக்கு அதிகமாகப் பெயர்த்து எழுதியிருந்தனர் .

## *அளவை* A - *மொழி*

பெரும்பாலான மாணவர்கள் நல்ல சொல்வளத்தோடு பலதரப்பட்ட வாக்கிய அமைப்புகளைக் கொண்டு தம் கருத்துகளை நிரல்பட அமைத்திருந்தனர் .பலரும் உச்ச மதிப்பெண்களை இப்பகுதியில் பெற்றிருந்தனர் .சிலரது படைப்புகளில் மட்டும், அளவுக்கு அதிகமான சொற்பிழைகளும் வாக்கியப் பிழைகளும் காணப்பட்டன .வேறு சில படைப்புகளில் கருத்துப்பிழைகளோடு பொருத்தமற்ற மேற்கோள்களும் சுட்டப்பட்டிருந்தன. மேலும், சிலரது கையெழுத்து எளிதில் படித்துப் புரிந்துகொள்ள இயலா வண்ணம் மோசமாக இருந்தன.

## *அளவை* B - *உள்ளடக்கம்*

பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட தலைப்பிற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கருத்துகளையும் சான்றாதாரங்களையும் காட்டி விளக்கியிருந்தனர் . தகுந்த சான்று பனுவலிலிருந்து தக்க சான்று காட்டியும் இருந்தனர் .தாங்கள் எழுதும் கட்டுரையின் உள்ளடக்கத்தைப் பற்றிய தெளிவும் சீரான போக்கும் பலருடைய படைப்புகளில் காணப்பட்டன .சிலர் மட்டும், அடிப்படையான கருத்துகளிலிருந்து விலகிச் சென்று தேவையற்ற செய்திகளையும் இணைத்துத் தங்கள் கட்டுரைகளை எழுதியிருந்தனர் .

மாணவர்களிடையே செயல்திறத்தை வேறுபடுத்த இப்பகுதி பெரிதும் காரணமாய் அமைந்தது. தரமான படைப்புகள் பொருத்தமான கருத்துகளைச் சான்று பனுவல்களிலிருந்து தேர்ந்தெடுத்துப் பொருத்தமாகப் பயன்படுத்தியிருந்தனர். மையக்கருத்துகளை முறையே அடையாளங்கண்டு அவற்றைத் தனிப்படுத்திக் காட்டியிருந்தனர். தரமான ஒப்படைப்புகளைச் செய்யத் தவறியவர்களின் படைப்புகளில் இந்தத் தெளிவான போக்குக் காணப்படவில்லை. சிலர் மூன்று பனுவல்களிலும் உள்ள செய்திகளைத் தம் படைப்புகளுக்குப் பயன்படுத்தத் தவறியிருந்தனர்.

## *அளவை* C - *அமைப்பு*

பெரும்பாலான மாணவர்கள் தங்கள் கட்டுரைக்கு ஏற்ற பனுவல் வகையைத் தெரிவுசெய்வதில் தெளிவு கொண்டிருந்தனர் .அவர்களின் மொழிநடை அணுகுமுறையின் மூலம் இக்கூறு தெளிவாக வெளிப்பட்டது . செய்திக்கட்டுரையாகவும், மின்னஞ்சல் வடிவிலும், உரையாடல் பாணியிலும் எனப் பல்வேறுபட்ட வடிவங்களில் படைப்புகள் அமைந்திருந்தன.

ஒவ்வொரு பனுவல் வகையையும் வேறுபடுத்திக் காட்டும் இன்றியமையாக் கூறுகள் தெளிவுபடக் காட்டப்பட்டிருந்தன. (எ-டு) மின்னஞ்சல், கடித வகைப் பனுவல்களுக்கு உள்ள கூறுகள். அறிக்கை, உரையாடல் முதலான பனுவல் வகைகளிலும் பொருத்தமான அமைப்புமுறை கையாளப்பட்டிருந்தது.



International Baccalaureate
Baccalauréat International
Bachillerato Internacional

### *அளவை* D - *நோக்கம்*

கட்டுரைப் படைப்பை விளக்கும் விதமாக 100 சொற்களில் தம் ஒப்படைப்புப்பற்றி மாணவர்கள் எழுத வேண்டும். அதில் ஒப்படைப்பு அமையப்பெற்ற நோக்கங்கள் பற்றித் தெளிவாக விளக்கியும் அவற்றை எவ்வாறு அடையவிருப்பது குறித்தும் விரிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் தலைப்பைத் தேர்ந்தெடுத்தற்கான காரணத்தைத் தக்க முறையில் விளக்கியிருந்தனர் .பனுவல் வகையின் தெரிவையும் நன்கு விளக்கியிருந்தனர் .படைப்புக்கு எந்தச் சான்று பனுவல்களைப் பயன்படுத்திக் கொள்ளவிருக்கும் செய்திகளையும் குறிப்பிட்டிருந்தனர் .சிலர் மட்டும், ஒப்படைப்பின் நோக்கங்களை வரையறுத்துக் கூறுவதில் தடுமாறிப் போயிருந்தனர். அவற்றோடு ஒப்படைப்பின்வழி எவ்வாறு நோக்கங்களை அடையவிருப்பதையும் விளக்கச் சிலர் தவறியிருந்தனர் .

## *எதிர்கால மாணவர்களின் கற்பித்தலுக்குரிய பரிந்துரைகளும் வழிகாட்டலும்*

மையப் பாடப்பொருளைத் தெரிவுசெய்வதில் மாணவர்களுக்கு ஆசிரியர் மேலும் வழிகாட்டி உதவலாம். தெரிவு செய்த பாடப்பொருள் குறித்த பொருத்தமான பனுவல்களைத் தேடிப் பெறுவதிலும் அவற்றின் பொருத்தப்பாட்டைப் பற்றியும் தனிப்பட்ட ஆலோசனைகள் கூறுவதில் மாணவர்களுக்கு ஆசிரியரின் உதவியும் ஒத்துழைப்பும் பெரிதும் தேவை .தரமான பனுவல்களப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்கும் மாணவர்களுக்குத் துணைநின்று சரியாக வழிநடத்த வேண்டும். பொருத்தமில்லாத பனுவலாக இருப்பின் தக்க முறையில் விளக்கி வேறு பொருந்துகின்ற பனுவலைத் தேடிப் பெற ஊக்குவிக்க வேண்டும்.

படைப்பில் உள்ளடங்கக்கூடிய கூறுகள் ஒவ்வொன்றையும் மாணவர்களுக்கு அடிக்கடி விளக்கியுரைத்தல் பயன் தரும் .கட்டுரை எழுதத் தொடங்குமுன் நோக்கம் குறித்த வரைவைச் சரிபார்த்து ஒப்புதல் வழங்குதல் சாலச் சிறந்தது .

தேவையான சொல்லளவில் மாணவர்கள் தங்கள் படைப்பை அமைக்க வேண்டும் என்பதையும் நினைவுறுத்த வேண்டும் .படைப்பில் மையப் பொருளைவிட்டு விலகிச் செல்லாதிருக்க அடிக்கடி வழிகாட்டி உதவுதல் வேண்டும்.

மாணவர்கள் சான்று பனுவல்களில் உள்ள உள்ளடக்கத்தை நன்கு புரிந்துகொண்டத்தை ஆசிரியர்கள் உறுதிப்படுத்திய பிறகு எத்தகைய முறையில் மாணவர்கள் ஒப்படைப்புப்பணியை மேற்கொள்ளலாம் என்பதில் நல்ல திட்டமிடல் வேண்டும். எந்தப் பனுவல் வகையைப் பயன்படுத்தி ஒப்படைப்பை அமைப்பது குறித்து மாணவர்களோடு தெளிவான கலந்துரையாடலுக்குப் பிறகு அதில் ஈடுபடச் செய்யலாம்.



International Baccalaureate® Baccalauréat International Bachillerato Internacional

## Standard level paper one

### Component grade boundaries

| Grade: | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| Mark range: | 0 - 7 | 8 - 19 | 20 - 24 | 25 - 29 | 30 - 34 | 35 - 38 | 39 - 45 |

## *மாணவருக்குச் சிரமத்தை ஏற்படுத்தியகல்வித் திட்டம் தேர்வு சார்ந்த பகுதிகள்*

இப்பகுதியில் நான்கு மொழிப்பகுதிகள் இடம் பெற்றிருந்தன .இப்பகுதிகளையொட்டி அமையப்பெற்ற வினாக்களின் மூலம் மாணவர்களின் புரிந்துணர்வு ஆற்றல் சோதிக்கப்பட்டுள்ளது .பொதுவில், எல்லா வாசிப்புப்பகுதிகளும் மாணவர்களின் மொழித்திறத்திற்கும் புரிந்துணர்விற்கும் ஏற்புடைய வகையில் அமைந்திருந்தன . எனினும், பகுதி-3 இல் இடம்பெற்ற பகுதி மாணவர்கள் சிலருக்குக் கடினமாக அமைந்ததாகக் கருதப்பட்டது .ஏனைய பகுதிகளில் மாணவர்கள் சிரமமின்றிப் பதிலளித்திருந்தனர் .

முன்னைய ஆண்டுகளைப் போலவே, இவ்வாண்டும் சரி/தவறு வாக்கியங்களையும் அவற்றிற்கான ஆதாரக்கூற்றையும் சுட்டி எழுதுவதில் மாணவர்கள் சிலர் சிரமப்பட்டிருந்தனர் .சிலர் சரி/தவறு என்று குறியிட்டிருந்தாலும் அதற்கான ஆதாரக்கூற்றைச் சரிவர எழுதுவதில் தவறு செய்திருந்தனர்; சிலர் எழுதவும் தவறியிருந்தனர் .மேலும், ஓரிருவர் சரியான ஆதாரக்கூற்றை எழுதியிருந்தும், கவனக்குறைவால், சரி/தவறு என்னும் இடத்தில் தவறாகக் குறியிட்டிருந்தனர்.

கொடுக்கப்பட்டுள்ள பனுவலின் பத்திகளில் விடுபட்டுள்ள துணைத்தலைப்புகளைக் கண்டறிந்து எழுவதில் பலரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர் .நெருக்கமான தெரிவுகள் அதற்குக் காரணமாய் அமைந்திருக்க வாய்ப்புண்டு .

கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் படித்து பகுதி-3 இல் அதற்குப் பொருத்தமான சொற்களையும் தொடர்களையும் தெரிவுசெய்து எழுதுவதிலும் சிலர் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர் .வரிகளின் எண்கள் உதவியாய் அமைந்திருந்த போதிலும் மாணவர்கள் சிரமத்தை எதிர்நோக்கியதற்குப் போதிய பயிற்சியின்மை காரணமாய் இருந்திருக்கலாம் .


International Baccalaureate Baccalauréat International Bachillerato Internacional

புதிய வினாப்பகுதியாக இடம்பெற்றிருந்த 'சொல்லும் தொடரும்' என்னும் பகுதியையும் சிலர் சரிவரப் பதிலளிக்கத் தவறியிருந்தனர் .மாணவர்களுக்குத் தகுந்த பயிற்சியின்மை இதற்குக் காரணம் எனக் கருதலாம் .

## *மாணவர்கள் திறம்படத் துலங்கிய கல்வித் திட்டம் தேர்வு சார்ந்த பகுதிகள்*

தேர்வில் இடம் பெற்றிருந்த நான்கு பனுவல்களுமே பெரும்பாலான மாணவர்களின் மொழித்திறத்திற்கும் அனுபவ எல்லைக்கும் உட்பட்டு அமைந்திருந்தன .பலரும் ஒவ்வொரு பனுவலையொட்டியும் கேட்கப்பட்ட வினாக்களுக்குத் தகுந்த முறையில் பதிலளித்திருந்தனர் .மொழித்திறத்தில் பின்தங்கிய சிலர் தமிழ்மொழியில் ஆழ்ந்த வாசிப்பு இல்லாத காரணத்தால், சில வினாக்கூறுகளில் சிரமத்தை எதிர்நோக்கினர் .

மாணவர்கள் பலரும் திறம்படச் செய்த பகுதிகளென சிறுவிடை பகுதியையும், முதற்பகுதியை ஏற்ற தொடரோடு இணைக்கும் பகுதியையும் தனிப்படுத்திச் சொல்லலாம்.

## *தனிப்பட்ட கேள்விகளைக் கையாள்வதில் மாணவர்களின் நிறை குறைகள்*

பனுவல் A-யைக் கொண்டு அமையப்பெற்ற வினாக்களுக்குச் சிறுவிடை தரும் பகுதியில் பெரும்பாலான மாணவர்கள் தக்க பதில் எழுதியிருந்தனர் .அடுத்து, முதற்பகுதித் தொடருக்குப் பொருத்தமான தொடரைத் தெரிவுசெய்து இணைக்கும் பகுதியிலும் மிகச் சிலரே சிரமத்தை எதிர்நோக்கினர் .அவ்வாறு தொடர்களை இணைக்கும்போது, சிலர் கவனக்குறைவு காரணமாக வாக்கியத்தில் உள்ள மொழிநிலைப் பொருத்தமுடைமையைக் கருதிப்பார்க்கத் தவறிவிட்டனர் .அதனால், நெருக்கமான தெரிவுகளில் தவறுகளையும் செய்திருந்தனர்.

பனுவல் B-யைக் கொண்டு அமைந்த வினாக்களில், துணைத்தலைப்புகளைக் கண்டறிந்து எழுதுவதில் சராசரியாக மேற்பட்ட மதிப்பெண்களைப் பலரும் பெற்றிருந்தனர் .நெருக்கமான தெரிவுகள் இப்பகுதியில் கடினத்தன்மையை அதிகரித்திருக்கலாம். அடுத்து, இப்பனுவலையொட்டி அமைந்த சொற்பொருள் பகுதியில் பெரும்பாலான மாணவர்கள் கணிசமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர் .ஆயினும், கவனக்குறைவு காரணமாகச் சிலர் பொருந்தாத தெரிவுகளையும் விடையாக எழுதியிருந்தனர் .பொதுவில், மாணவர்களுக்குச் சொல்வளப் பயிற்சி அதிகம் தேவை என்பதை இது காட்டுகிறது.

பனுவல் C பலருக்கும் சிரமத்தை ஏற்படுத்திய பகுதி என்று குறிப்பிடலாம் .ஆழ்ந்த வாசிப்பு அற்ற மாணவர்களுக்கு இப்பகுதியில் கடினமான மொழிநடை சிரமத்தை ஏற்படுத்தியிருந்தது .மொழித்திறத்தில் பின்தங்கிய மாணவர்கள் பனுவலில் இடம்



International Baccalaureate
Baccalauréat International
Bachillerato Internacional

பெற்றுள்ள செய்திகளை முழுமையாகப் புரிந்துகொள்வதிலும் சிரமப்பட்டிருந்தனர் . அதனையொட்டி அமைந்த சரியான கூற்றுகள் நான்கினைத் தெரிவுசெய்தல் வினாவகையில், பலரும் தடுமாறியிருந்தனர் .நெருக்கமான தெரிவுகள் மாணவர்கள் பலருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்று கருதலாம் .அடுத்து, கொடுக்கப்பட்டுள்ள தொடர்களைப் படித்து, அவற்றிற்கு ஈடான சொற்களைப் பனுவலிலிருந்து கண்டறிந்து எழுதுவதிலும் மாணவர்கள் சிலர் போதிய மொழியனுபவம் இல்லாத காரணத்தால் தவறுகள் செய்திருந்தனர் . கொடுக்கப்பட்டுள்ள தொடர்களில் பனுவலின் வரி எண்கள் வழங்கப்பட்ட நிலையில் சரியான சொற்களைக் கண்டறிய இயலாதது அவர்களுக்கு மேலும் இத்தகைய பயிற்சிகள் நிரம்பத் தேவை என்பதைக் காட்டுகிறது.

பனுவல் D-யைக் கொண்டு அமைந்த வினாக்களில் பெரும்பாலான மாணவர்கள் நன்கு செய்திருந்தனர் .போதிய மொழித்திறம் இல்லாத மாணவர்கள் சிலர் சரி தவறு வாக்கியங்கள் பகுதியில் ஆதாரக்கூற்றைக் கண்டறிந்து எழுதுவதில் சிரமப்பட்டனர் . பனுவலில் இடம் பெற்றுள்ள தொடர்கள் குறித்து எழுப்பப்பட்ட வினாக்கள் பகுதியிலும் அவர்கள் திறம்படச் செய்யவில்லை

## *எதிர்கால மாணவர்களின் கற்பித்தலுக்குரிய பரிந்துரைகளும் வழிகாட்டலும்*

தாள்-1 இல் இடம் பெறும் வினா வகைகளில் யாவற்றிலும் மாணவர்களுக்குத் தகுந்த பயிற்சி தேவை .பனுவலையொட்டி அமையப்பெறும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதினால் மட்டுமே போதும் என்றும், அளவில் சிறிது என்பதால் தேவையற்ற செய்திகளையும் இணைத்து எழுதுதல் தேவையில்லை என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும் .பனுவல் ஒவ்வொன்றும் மாணவர்களின் வயது அனுபவம் ஆகியவற்றிற்குப் பொருந்தும் பகுதியென்பதால், பனுவல்களை முழுமையாகப் படித்துப் புரிந்துகொண்டு பதிலளிக்க வழிகாட்ட வேண்டும் .எளிய பகுதியென்பதால் விரைவாகப் படித்துவிட்டு விடையளிக்க முற்படுவதால் தேவையற்ற தவறுகள் ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது என்பது விளக்கப்பட வேண்டும் .

வழங்கப்படும் பனுவல்களின் உள்ளடக்கத்தை விரைந்து படிந்து மையக் கருத்துகளைப் பகுத்துணரும் ஆற்றல் மாணவர்களிடையே வளர்க்கப்பட வேண்டும். மொழியளவில் பனுவல்கள் மாணவர்களின் வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற நிலையில் இருந்தும், பலரும் வினாக்களுக்குப் பொருத்தமற்ற தெரிவுகளை விடைகளாக அளித்திருத்திருந்தது மொழிநிலையில் மாணவர்கள் பலருக்கும் இருக்கும் இயலாமையை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இந்தக் குறைபாட்டைக் களைய ஆசிரியர்கள் நிறையப் பயிற்சிகளைத் தர வேண்டும்.

## Standard level paper two

### Component grade boundaries

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Grade:** | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **Mark range:** | 0 - 2 | 3 - 5 | 6 - 9 | 10 - 14 | 15 - 18 | 19 - 21 | 22 - 25 |

## *மாணவருக்குச் சிரமத்தை ஏற்படுத்தியகல்வித் திட்டம் தேர்வு சார்ந்த பகுதிகள்*

தாள் இரண்டு, பரந்துபட்ட வகையில் மாணவர்களின் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனைச் சோதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது .இதன்வழி, மாணவர்களின் படைப்பாக்கத்திறன் சோதித்து அறியப்படுகிறது. வெவ்வேறு பனுவல் வகைகளை உள்ளடக்கிய ஐந்து பணிகள் வினாத் தெரிவுகளாக வழங்கப்பட்டிருந்நன. பண்பாட்டு வேற்றுமை, மரபும் பழக்கவழக்கங்களும், உடல்நலம், பொழுதுபோக்கு, அறிவியலும் தொழில்நுட்பமும் என ஐந்து விதமான தெரிவுகளில் வினாக்கள் அமையப்பெற்றன .இவற்றுள், ஒன்றை மாணவர்கள் தெரிவுசெய்து எழுதுமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

தேர்வு எழுதிய மாணவர்கள் எல்லாத் தலைப்புகளையும் தொட்டு எழுதியிருந்தனர் . அவற்றுள், வினா 2 மற்றும் வினா 4 ஆகியவை மாணவர்களுக்குச் சிலருக்குச் சிரமத்தை ஏற்படுத்திய தலைப்புகளாக அமைந்தன .வினா 2-இல் கலந்துகொண்ட பயிற்சிப் பட்டறையில் கண்ட நிறை குறைகள் குறித்து கடிதம் வாயிலாக நிறுவனர்க்குத் தெரியப்படுத்துதல் என்னும் தெரிவைத் தேர்ந்தெடுத்தவர்கள் பயிற்சியில் கற்றுக்கொண்டவற்றைத் தெளிவுபட எழுதச் சிரமப்பட்டிருந்தனர். அதே போல, 'பள்ளி விடுமுறைகள் மாணவரின் பொழுதுபோக்கிற்காகவும் நலத்திற்காகவும் ஒதுக்கப்பட வேண்டும்' என்னும் தலைப்பில் வலைப்பூ பதிவு செய்யும் தெரிவிலும், சிலர் தலைப்பைவிட்டு விலகி, எத்தகைய பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மாணவருக்குப் பயன்படும் என்பதைப் பற்றி விளக்கி எழுதியிருந்தனர்.

மொழியில் பின்தங்கிய மாணவர்களும் சராசரி மொழித்திறம் கொண்ட மாணவர்களும் தங்கள் கருத்துகளை விளக்கிச் சொல்வதில் சிரமத்தை எதிர்நோக்கினர் .சரியான சொல்லாட்சியும், மொழியமைப்பும் அவர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுத்திய பகுதிகளாகச் சொல்லலாம் .இதனால், வாக்கியச் சிதைவும், குழப்பமான மொழி அமைப்புகளும் கொண்டதாய் அவர்களது படைப்புகள் அமைந்திருந்தன.


International Baccalaureate Baccalauréat International Bachillerato Internacional

# மாணவர்கள் திறம்படத் துலங்கிய கல்வித் திட்டம் தேர்வு சார்ந்த பகுதிகள்

பொதுவில், மாணவர்கள் தேர்வுக்கு தயார்நிலையில் இருந்தனர் .தமிழ் மொழி மீதுள்ள ஈடுபாடு அவர்களின் செயல்திறன்வழி நன்கு புலப்பட்டது . தெரிவுசெய்யப்பட்ட தலைப்புகளில் நன்கு ஆராய்ந்து நல்ல கருத்துகளையும் ஆதாரச்சான்றுகளையும் தந்து எழுதுவதில் பொதுவில், மாணவர்கள் திறம்படச் செய்துள்ளனர் .

எல்லா மாணவர்களும் எதிர்பார்க்கப்பட்ட சொல்லளவைக் காட்டிலும் அதிகமாகவே எழுதியிருந்தனர் .பலரது படைப்புகளில் செறிவான கருத்துகளும் அவற்றை விரித்துரைக்கும் நிலையில் செயல்திறம் மேலோங்கிக் காணப்பட்டது .நல்ல சான்றுகள் காட்டித் தங்கள் கருத்துக்களுக்கு வலுவூட்டும் வகையில் பலரும் திறம்படத் தம் படைப்புகளை முன்வைத்திருந்தனர். குறிப்பாக, மாணவர்களுக்கு நன்கு பரிச்சயமான அறிவியலும் தொழில்நுட்பக் கருப்பொருளில் அமைந்த 'இணைப் பயன்களும் பாதுகாப்பும்' என்றும் தலைப்பில் இணைய வசதிகள் குறித்தும், அதே வேளையில் அங்குக் குடிகொண்டிருக்கும் ஆபத்துகள் குறித்தும் மாணவர்கள் பற்பல செய்திகளைத் தம் படைப்புகள் மூலம் வெளிப்படுத்தியிருந்தனர். அதுபோல், உடல்நலம் பற்றிய கருப்பொருளில் அமைந்த வினாவிலும், நிகழ்வுக் கட்டுரை வடிவில் வாசகர்களை ஈர்க்கும் வகையில் நிகழ்ச்சிப்பின்னலை விரிவாக விளக்கியும் உணர்வுகளை வெளிப்படுத்தியும் அமைத்திருந்தனர்.

பொதுவில், பெரும்பாலான மாணவர்களின் படைப்புகள் அவர்களின் அறிவு முதிர்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் நடப்பு விவகாரங்களில் அவர்களுக்கு உள்ள பின்புல அறிவைப் பறைசாற்றுவதாயும் அமைந்திருந்தன.

# தனிப்பட்ட கேள்விகளைக் கையாள்வதில் மாணவர்களின் நிறை குறைகள்

## தலைப்பு 1 - அறிவியலும் தொழில்நுட்பமும்

மாணவர்கள் பலரும் இத்தலைப்பைத் தெரிவுசெய்து எழுதியிருந்தனர். இணையம் பற்றி மாணவர்களுக்கு உள்ள பின்புல அறிவு அவர்களின் படைப்புகளின்வழி நன்கு வெளிப்பட்டது. இணையத்தை அலட்சியமாகப் பயன்படுத்துவதால் விளையும் ஆபத்துகள் குறித்தும் அண்மைய தகவல்களையும் செய்தித்தாள் சம்பவங்களையும் குறித்து விளக்கியிருந்தனர். சிலர் மட்டும், மாணவர்களுக்கு இணையம் எவ்வகையில் பயனளிக்கிறது என்னும் கோணத்தில் மட்டுமே கட்டுரையை அமைந்திருந்தனர். மொழியில் பின்தங்கிய மாணவர்கள் தொழில்நுட்பம் சார்ந்த தமிழ் வழக்கில் சற்றுச் சிரமத்தை எதிர்நோக்கினர். இப்படைப்பு உரைவடிவில் எதிர்பார்க்கப்பட்டது. பலரும் தங்கள் மொழிநடையிலும் தொனியிலும் அதைத் திறம்பட வெளிப்படுத்தியிருந்தனர்.

சிலர் மட்டும் உரைநடைக் கட்டுரையாகவே அமைத்திருந்தனர். பொதுவில், இத்தலைப்பைத் தெரிவுசெய்து எழுதியோர் பலரும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர்.

### *தலைப்பு 2 - மரபும் பழக்கவழக்கங்களும்*

இப்பகுதியில் இடம் பெற்ற வினாவில் மாணவர்கள் இரண்டு நாள் பட்டறை வகுப்பில் கலந்துகொண்ட அனுபவம் பற்றியும் அதன் நிறை குறைகள் பற்றியும் நிறுவனருக்குக் கடிதம் வாயிலாக எழுதுவதாகப் படைப்பு அமைய வேண்டும். இத்தலைப்பை அதிகமான மாணவர்கள் தெரிவுசெய்து எழுதவில்லை. எழுதிய சிலரும் தரமான படைப்புகளை முன்வைக்கவில்லை. இத்தகைய தலைப்பில் அதிகம் எழுதிய பயிற்சியின்மை அதற்குக் காரணமாய் இருக்கலாம்.

### *தலைப்பு 3 - உடல்நலம்*

இது ஒரு நிகழ்வுக் கட்டுரை வடிவத்தில் அமையப்பெற்ற தலைப்பாகும். இத்தலைப்பில் சிலர் எழுதியிருந்தனர். நோய் ஏற்படுவதற்கான காரணத்தை நன்கு விளக்கியதோடு, அதனால் விளைந்த மனவுளைச்சலையும் விவரித்து எழுதியிருந்தனர்.

### *தலைப்பு 4 - பொழுதுபோக்கு*

இத்தலைப்பில், 'பள்ளி விடுமுறைகள் மாணவரின்பொழுதுபோக்கிற்காகவும் நலத்திற்காகவும் ஒதுக்கப்பட வேண்டும்' என்பதை வலியுறுத்தி வலைப்பூ பதிவு செய்ய வேண்டும். இத்தலைப்பில் எழுதியோர் சிலர், பள்ளி விடுமுறைகளில் எப்படிப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகளில் செலவிடலாம் என்னும் பொருள்பட எழுதியிருந்தனர். தலைப்பை நன்கு படித்துப் பார்த்து எதிர்பார்ப்புக்கேற்பக் கட்டுரை வரையும் திறனை மாணவரிடையே வளர்த்தல் அவசியமாகும்.

### *பண்பாட்டு வேற்றுமை*

இத்தலைப்பைப் பலரும் தெரிவுசெய்து எழுதியிருந்தனர். பொங்கல் பண்டிகை குறித்து மாணவர்களுக்கு இருந்த பின்புல அறிவு இதற்குப் பெரிதும் உதவியது. இத்தலைப்பில் எழுதியோர் பலரும் நல்ல படைப்புகளை முன்வைத்திருந்தனர்.

## *எதிர்கால மாணவர்களின் கற்பித்தலுக்குரிய பரிந்துரைகளும் வழிகாட்டலும்*

பொதுவில், மாணவர்களின் கையெழுத்து இன்னும் மேம்பட வேண்டும் .சில இடங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று புரிந்துகொள்ள இயலாத நிலையில் ஓரிருவரின் கையெழுத்து மோசமாக இருந்தது .

எத்தகைய பனுவல் வகையைத் தெரிவுசெய்து எழுதுகிறோம் என்பதில் மாணவர்களுக்குக் கூடுதல் பயிற்சி தேவைப்படுகிறது .சிலரது படைப்புகளில் பனுவல் வகைமைகள் மாறுபட்டு வருவது அவர்களது படைப்புத்திறனைக் குன்றச் செய்யும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

ஒரு தலைப்பைத் தொட்டு எழுதுவதற்குமுன் தலைப்பைப் பலமுறை வாசித்து உள்வாங்கிக்கொண்டு கருத்துகளை அமைப்புநிலையில் சீராக விளக்கிச் செல்லும் பாங்கினை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.



International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional